இனிமையான குழந்தைகளே ! தன்னை திருத்திக் கொள்வதற்கு கவனம் கொடுங்கள், தெய்வீக குணங்களை தாரணை செய்யுங்கள். பாபா ஒருபோதும் யார் மீதும் கோபப்படுவதில்லை, படிப்பினை கொடுக்கின்றார், இதில் பயப்படுவதற்கான விசயம் எதுவும் இல்லை.

கேள்வி: குழந்தைகளுக்கு எந்த நினைவு இருந்தால் நேரத்தை வீணாக்க மாட்டார்கள்?

பதில்: இது சங்கமத்தின் நேரமாகும், மிக உயர்ந்த இலாட்டரி கிடைத்திருக்கிறது. பாபா நம்மை வைரத்திற்குச் சமமாக தேவதையாக மாற்றிக் கொண்டிருக்கிறார். இந்த நினைவு இருந்தால் ஒருபோதும் நேரத்தை வீணாக்க மாட்டார்கள். இந்த ஞானம் வருமானத்தின் ஆதாரமாகும், ஆகையால் ஒருபோதும் படிப்பை தவற விடக்கூடாது. மாயை தேக அபிமானத்தில் கொண்டு வருவதற்கான முயற்சி செய்யும். ஆனால் உங்களுடைய யோகம் நேரடியாக பாபாவிடம் இருக்கு மானால், நேரம் நல்ல விதமாக பயன்படுத்தப்படும்.

ஓம் சாந்தி. குழந்தைகளுக்கு இவர் தந்தை என்று தெரிந்திருக்கிறது, இதில் பயப்படுவதற்கான எந்த விசயமும் இல்லை. சாபமிடவோ, கோபப்படுவதற்கோ, இவர் எந்த சாதுவோ, மகாத்மாவோ கிடையாது. அந்த குருக்கள் போன்றோரிடம் மிகுந்த கோபம் இருக்கும், ஆகையால் சாபம் எதுவும் கொடுத்து விடக்கூடாது என்று அவர்களிடம் மனிதர்கள் பயப்படுகிறார்கள். இங்கே அப்படி எந்த விசயமும் கிடையாது. குழந்தைகள் ஒருபோதும் பயப்படுவதற்கான விசயமே இல்லை. யார் தங்களுக்குள் சஞ்சலத்துடன் இருக்கின்றார்களோ, அவர்கள் பாபாவிடம் பயப்படுகின்றார்கள். லௌகீகத் தந்தை கோபப்படவும் செய்கிறார். இங்கே பாபா ஒருபோதும் கோபப்படுவதில்லை. பாபாவை நினைவு செய்யவில்லையானால் விகர்மங்கள் வினாசம் ஆகாது, தன்னுடைய பல பிறவிகளுக்கான நஷ்டத்தை தானே ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்று புரிய வைக்கிறார். குழந்தைகள் தன்னை மாற்றிக்கொள்ளட்டும் என்று பாபா புரிய வைக்கிறார். மற்றபடி பாபா கோபப்படுகிறார் என்பது கிடையாது.. குழந்தைகளே தன்னை திருத்திக் கொள்வதற்கு நினைவு யாத்திரையில் கவனம் கொடுங்கள் என்று பாபா புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். கூட கூடவே சக்கரத்தை புத்தியில் வையுங்கள், தெய்வீக குணங்களை தாரணை செய்யுங்கள். நினைவு தான் முக்கியமானது. மற்ற படி சிருஷ்டிச் சக்கரத்தின் ஞானம் மிகவும் எளிதாகும். இது வருமானத்திற்கு ஆதாரமாகும், ஆனால் கூடவே தெய்வீக குணங்களையும் தாரணை செய்ய வேண்டும். இந்த நேரம் முற்றிலும் அசுர குணமுடையவர்களாக இருக்கின்றார்கள். சிறிய குழந்தைகளிடம் கூட அசுர குணங்கள் இருக்கின்றன. ஆனால் அவர்களை கண்டிப்பாக அடிக்கக் கூடாது, அதனால் அவர்கள் மேலும் அசுர குணங்களை கற்றுக் கொள்கிறார்கள். அங்கே சத்யுகத்தில் அப்படி கற்றுக்கொள்வதில்லை. இங்கே தாய்-தந்தையிடமிருந்து குழந்தைகள் அனைத்தையும் கற்றுக் கொள்கிறார்கள். பாபா ஏழைகளின் விசயத்தைச் சொல்கிறார். பணக்காரர் களுக்கு இங்கேயே சொர்க்கம் போல தோன்றுகிறது. அவர்களுக்கு ஞானத்தின் அவசியம் இல்லை. இது படிப்பாகும். இங்கே சொல்லிக் கொடுப்பதற்கு, சீர்திருத்துவதற்கு டீச்சர் வேண்டும். ஆக,

பாபா ஏழைகளின் விசயத்தைச் சொல்கிறார். குழந்தைகளின் நிலை என்ன, குழந்தைகள் எப்படி எப்படியெல்லாம் மோசமடைகின்றார்கள் என்று சொல்கிறார். தாய்-தந்தையை அனைவரும் பார்த்துக் கொண்டே இருக்கின்றனர். பிறகு சிறிய வயதிலேயே அனைவரும் மோசமாகி விடுகின்றனர். நான் கூட ஏழைப்பங்காளன் என்று இந்த ஆன்மீகத் தந்தை சொல்கின்றார். பாருங்கள்! இந்த உலகத்தில் மனிதர்களின் நிலை என்ன என்று புரிய வைக்கின்றேன். தமோபிரதான உலகமாக இருக்கிறது. தமோபிரதானத்திற்கு கூட எல்லை வேண்டுமல்லவா! கலியுகத்துக்கு 1250 வருடங்கள் ஆகிவிட்டது. ஒரு நாள் கூட அதிகம் குறைவு கிடையாது. எப்போது தமோபிரதானம் ஆகிவிடுகிறதோ, அப்போது பாபாவுக்கு வர வேண்டியிருக்கிறது. நான் நாடகத்தில் கட்டுண்டிருக் கின்றேன், நான் வந்து தான் ஆக வேண்டும் என்று பாபா சொல்கிறார். ஆரம்பத்தில் எத்தனை ஏழைகள் வந்தார்கள், பணக்காரர்கள் கூட வந்தார்கள், இருவரும் சேர்ந்து அமர்ந்தார்கள். பெரிய-பெரிய வீட்டுக் குழந்தைகள் வந்தார்கள், எதையும் கொண்டுவரவில்லை. எவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்டுவிட்டது. நாடகத்தில் என்ன நடக்க வேண்டியிருந்ததோ, அது நடந்து விட்டது. இப்படி ஆகும் என்று நினைத்துக் கூட பார்த்ததில்லை. என்ன நடந்து கொண்டி ருக்கிறது என்று பாபா அவரே ஆச்சரியப்படுகின்றார். இவர்களுடைய வரலாறு மிக ஆச்சரிய மானதாகும். இது கூட நாடகத்தில் பதிவாகி இருக்கிறது. நாங்கள் ஞான அமிர்தம் குடிக்கச் செல்கிறோம் என்று கடிதம் எழுதிக் கொண்டு வாருங்கள் என்று பாபா அனைவருக்கும் சொல்லி விட்டார். பிறகு அவர்களுடைய கணவன்மார்கள் வெளிநாட்டிலிருந்து வந்து விட்டார்கள். அவர்கள் விஷத்தைக் கொடுக்கச் சொன்னார்கள், இவர்கள் நாங்கள் ஞான அமிர்தம் குடித்திருக்கின்றோம், விஷத்தை எப்படிக் கொடுக்க முடியும் என்றனர். இதைப்பற்றி இவர்களுடைய ஒரு பாட்டு கூட இருக்கிறது. இதைத் தான் வரலாறு என சொல்லப்படுகிறது. சாஸ்திரத்தில் கிருஷ்ணருடைய வரலாறு என்று எழுதிவிட்டனர். கிருஷ்ணருடைய விசயமோ ஏற்பட முடியாது. ஆக இவை யனைத்தும் நாடகத்தில் பதிவாகி இருக்கிறது. நாடகத்தில் இவையனைத்தும் நடக்கிறது. வேடிக்கை விளையாட்டு போல.... நாங்கள் எதுவும் செய்யவில்லை, நாடகத்தின் விளையாட்டு நடந்து கொண்டிருக்கிறது என்று இந்த இரண்டு தந்தையரும் சொல்கின்றனர். சின்னச்சின்னக் குழந்தைகள் வந்துவிட்டனர். அவர்கள் இப்போது எவ்வளவு பெரியவர்களாக ஆகி விட்டனர். குழந்தைகளுக்கான எவ்வளவு அற்புதமான பெயர்களை, சந்தேஷிக் குழந்தைகள் கொண்டுவந்தனர். பிறகு யார் இங்கிருந்து சென்று (வெளியே) விட்டனரோ, அவர்களுக்கு இப்போது அந்தப்பெயரே கிடையாது. பிறகு பழைய பெயர் ஆரம்பமாகிவிட்டது. ஆகையால் பிராமணர்களின் மாலை உருவாவதில்லை.

உங்களிடம் எதுவுமில்லை. முன்பு நீங்கள் மாலை உருட்டினீர்கள், இப்போது நீங்கள் மாலையின் மணி ஆகின்றீர்கள். அங்கே பக்தி இருப்பதில்லை. இது புரிந்து கொள்ள வேண்டிய ஞானம், ஆனாலும் வினாடிக்கான ஞானமாகும். பாபா ஞானக்கடல், கடல் முழுவதையும் மையாக ஆக்கி, காடுகளை பேனா ஆக்கினாலும் கூட ஞானம் முழுமை அடைய முடியாது என்று சொல்கின்றனர். ஆனால் வினாடிக்கான விசயமாகும். தலைவனைத் (பாபாவை) தெரிந்து கொண்டால், இராஜ்யம் என்ற ஆஸ்தி கண்டிப்பாக கிடைக்க வேண்டும். ஆக அந்த நிலையை அடைவதற்கு, அதாவது தூய்மையற்ற நிலையிலிருந்து

தூய்மை ஆவதில் உழைக்க வேண்டியிருக்கிறது. தன்னை ஆத்மா என்று புரிந்து, எல்லையற்ற தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்று பாபா சொல் கின்றார். இதில் தான் உழைப்பு தேவை. முயற்சி செய்விக்கக்கூடிய டீச்சர் இருக்கிறார் என்றாலும் கூட அதிர்ஷ்டத்தில் இல்லை என்றால் டீச்சர் என்ன செய்ய முடியும்! டீச்சரோ படிப்பிப்பார். இலஞ்சம் வாங்கிக் கொண்டு பாஸ் ஆக்கி விடுவார் என்பது கிடையாது. இங்கே பாப்தாதா இருவரும் இணைந்திருக்கின்றனர் என்று குழந்தைகள் புரிந்திருக்கின்றீர்கள். நிறைய குழந்தை களின் கடிதங்கள் பாப்தாதாவின் பெயரில் வருகிறது. சிவபாபா, ஃ/ர் பிரஜாபிதா பிரம்மா. இந்த தாதா மூலமாக தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைகின்றீர்கள். பிரம்மா மூலமாக ஸ்தாபனை செய்கின்றார் என்று திரிமூர்த்தியில் இருக்கிறது. பிரம்மாவை படைப்பவர் என்று சொல்ல மாட்டோம். ஒரு பாபா தான் எல்லையற்ற படைப்பவராக இருக்கிறார். பிரஜாபிதா பிரம்மா கூட எல்லையற்றவர் ஆகி விடுகிறார். பிரஜாபிதா என்றால் நிறைய பிரஜைகள் இருப்பார்கள். பெரியதிலும் பெரிய தாத்தா (கிரேட் கிரேட் கிரேண்ட் பாதர்) என்று அனைவரும் பிரம்மாவைச் சொல்கின்றனர். சிவபாபாவை இப்படி சொல்ல மாட்டார்கள். அவர் அனைத்து ஆத்மாக்களின் தந்தை ஆகிவிடுகின்றார். ஆத்மாக்கள் அனைவரும் சகோதர-சகோதரர்களாவர். பிறகு சகோதரன்-சகோதரி ஆகின்றனர். எல்லையற்ற மரத்தில் மூத்தவர் பிரஜாபிதா பிரம்மா ஆகிவிடுகிறார். மரத்தின் கிளைகள் கூட இருக்கிறதல்லவா! இது எல்லையற்ற மரமாகும். ஆதாம் மற்றும் ஏவாள் என்று யாரை சொல்கின்றனர்? பிரம்மா-சரஸ்வதியை சொல்கின்றனர். இப்போது மரம் மிகப் பெரிய தாகி விட்டது. முழு மரமும் இற்றுப் போய் விட்டது. பிறகு புதியதாக ஆக வேண்டும். இதைத் தான் பலதரப்பட்ட தர்மங்களின் மரம் என்று சொல்லப்படுகிறது. பலதரப்பட்ட அம்சங்கள் இருக்கிறது. ஒன்று போல மற்றொன்று இருக்க முடியாது. ஒவ்வொருவரின் நடிப்பும் ஒரே போல இருக்க முடியாது. இவை மிக ஆழமான விசயங்களாகும். சிறிய புத்தி (புத்தி குறைந்தவர்கள்) உடையவர்கள் புரிந்து கொள்ள முடியாது. அவர்களுக்கு மிகவும் கடினமாகும். ஆத்மாக் களாகிய நாம் சிறிய புள்ளியாக இருக்கின்றோம். பரமபிதா பரமாத்மா கூட சிறிய புள்ளி ஆவார், இவருக்குள் வந்து அமர்கின்றார். ஆத்மா சிறியது பெரியதாக ஆவதில்லை. பாப்தாதா, இருவருடைய இணைந்த நடிப்பு மிக அதிசயமானதாக இருக்கிறது. இந்த அனுபவம் நிறைந்த ரதத்தை பாபா எடுத்திருக்கிறார். இது பாக்கியசாலி இரதம் என்று பாபா அவரே புரிய வைக்கின்றார். இந்த மாளிகை அதாவது இரதத்தில் ஆத்மா அமர்ந்திருக்கிறது. நாம் இப்படிப்பட்ட பாபாவுக்கு வாடகைக்கு தன்னுடைய மாளிகை அல்லது இரதத்தைக் கொடுத்தால் என்ன நினைப்பீர்கள்! அதனால் தான் இவரை பாக்கியசாலி ரதம் என்று சொல்லப்படுகிறது, இதில் பாபா அமர்ந்து குழந்தைகளாகிய உங்களை வைரத்திற்குச் சமமான தேவதைகளாக ஆக்குகின்றார். முன்பு இதை புரிந்திருக்கவில்லை முற்றிலும் கீழான புத்தியாக இருந்தது.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள், பிறகு நன்றாக முயற்சியும் செய்ய வேண்டும். நேரத்தை வீணாக்கக் கூடாது. பள்ளியில் நேரத்தை வீணாக்குவதன் மூலம் தேர்ச்சி அடையாமல் ஆகி விடுவார்கள். பாபா உங்களுக்கு மிகப்பெரிய லாட்டரி கொடுக்கின்றார். ராஜாவுடைய வீட்டில் சென்று பிறவி எடுப்பது என்பது லாட்டரி கிடைப்பது போலத் தானே!

ஒன்றுமில்லாதவர் ஆகி விட்டால் அதை லாட்டரி என்று சொல்வோமா என்ன! இது அனைத்தை யும் விட உயர்ந்த இலாட்டரி ஆகும். இதில் நேரத்தை வீணாக்கக் கூடாது. மாயையின் குத்துச் சண்டை என்று பாபா தெரிந்திருக்கிறார். அடிக்கடி மாயை தேக அபிமானத்தில் கொண்டுவருகிறது. உங்களுடைய யோகம் நேரடியாக பாபாவிடம் இருக்கிறது. எதிரில் அமர்ந்திருக் கிறார் அல்லவா! ஆகையால் நாடகப்படி இங்கே புத்துணர்ச்சி அடைய வருகின்றீர்கள். நான் உங்களுக்கு என்ன புரிய வைக்கின்றேனோ, அதை தாரணை செய்ய வேண்டும் என்று பாபா சொல்கின்றார். இந்த ஞானம் உங்களுக்கு இப்போது தான் கிடைக்கிறது, பிறகு மறைந்து போய்விடும். நிறைய ஆத்மாக்கள் சாந்திதாமத்துக்கு சென்று விடுகின்றார்கள். பிறகு அரைகல்பத்திற்கு பக்திமார்க்கம் ஆரம்பமாகிறது. அரைகல்பத்திற்கு நீங்கள் வேத சாஸ்திரங்கள் படித்து வந்தீர்கள், பக்தி செய்து வந்தீர்கள். நீங்கள் பாபாவை நினைவு செய்தால் பிறவி-பிறவிகளுக்கான பாவம் அழிந்துவிடும் என்ற முக்கியமான விசயம் புரிய வைக்கப் படுகிறது. இந்த ஞானம் வருமானத்திற்கு ஆதாரம் ஆகும், இதன் மூலம் நீங்கள் பத்மாபதம் (பன்மடங்கு) பாக்கியசாலி ஆகின்றீர்கள். சொர்க்கத்தின் எஜமானர் ஆகின்றீர்கள். அங்கே அனைவரும் சுகமாக இருப்பார்கள். உங்களுக்கு சொர்க்கத்தில் எவ்வளவு அளவுகடந்த சுகத்தைக் கொடுத்தேன் என்று பாபா நினைவு படுத்துகின்றார். நீங்கள் உலகத்தின் எஜமானராக இருந்தீர்கள். பிறகு அனைத்தையும் இழந்து விட்டீர்கள். நீங்கள் இராவணனுக்கு அடிமை ஆகி விட்டீர்கள். இது இராமர் மற்றும் இராவணனுடைய எவ்வளவு அதிசயமான விளையாட்டாக இருக்கிறது! இது மீண்டும் நடக்கும். ஆரம்பமும் முடிவும் இல்லாத (அனாதி) உருவாக்கப்பட்ட நாடகமாகும். சொர்க்கத்தில் நீங்கள் சதா ஆரோக்கியமாக இருக்கின்றீர் கள். இங்கே மனிதர்கள் ஆரோக்கியமாக இருப்பதற்காக எவ்வளவு செலவு செய்கின்றனர், அது கூட ஒரு பிறவிக்காகத் தான். அரைகல்பத்திற்கு சதா ஆரோக்கியமாக ஆவதற்காக உங்களுக்கு என்ன செலவாகிறது! ஒரு நயா பைசா செலவு கிடையாது. தேவதைகள் சதா ஆரோக்கியமாக இருக்கின்றார்கள் அல்லவா! நீங்கள் இங்கு வந்திருப்பதே சதா ஆரோக்கியமானவர் ஆவதற்காகத் தான். ஒரு பாபாவைத் தவிர, அனைவரையும் சதா ஆரோக்கியமாக வேறு யாரும் ஆக்க முடியாது. இப்போது நீங்கள் சர்வகுணங்கள் நிறைந்தவர்களாக ஆகின்றீர்கள். நீங்கள் சங்கமயுகத்தில் இருக்கின்றீர்கள். பாபா உங்களை புதிய உலகத்தின் எஜமானராக ஆக்கிக் கொண்டிருக்கிறார். நாடகத்தின் திட்டப்படி எதுவரை பிராமணர் ஆகவில்லையோ, அதுவரை தேவதை ஆக முடியாது. எதுவரை புருஷோத்தம சங்கமயுகத்தில் பாபா புருஷோத்தமர் ஆக்குவதற்காக வரவில்லையோ, அதுவரை தேவதை ஆக முடியாது. நல்லது, இன்று பாபா ஆன்மீக டிரில் கற்பித்தார், ஞானமும் கொடுத்தார், குழந்தைகளுக்கு எச்சரிக்கையும் செய்தார். தவறு செய்யாதீர்கள், தலைகீழான விசயங்களைப் பேசவும் செய்யாதீர்கள். அமைதியாக இருங்கள், மற்றும் பாபாவை நினைவு செய்யுங்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. பாவகர்மங்களை விநாசம் செய்து தன்னை சீர்திருத்திக் கொள்வதற்கு நினைவு யாத்திரை யில் முழுமையான கவனம் கொடுக்க வேண்டும். தெய்வீக குணங்களை தாரணை செய்ய வேண்டும்.

2. தேவதை ஆவதற்கு சங்கமயுகத்தில், புருஷோத்தமர் ஆவதற்கான முயற்சி செய்ய வேண்டும். தவறுகள் செய்து தன்னுடைய நேரத்தை வீணாக்கக் கூடாது.

வரதானம் : ஞானத்தின் உயர்ந்த பொக்கிஷத்தை மகாதானியாகி தானம் செய்யக்கூடிய மாஸ்டர் ஞானக்கடல் ஆகுங்கள்.

தந்தை ஞானக்கடலாக இருக்கின்றார், அதேபோன்று மாஸ்டர் ஞானக்கடலாகி சதா மற்றவர்களுக்கு ஞான தானம் செய்து கொண்டே இருங்கள். ஞானத்தின் எவ்வளவு உயர்ந்த பொக்கிஷம் உங்களிடத்தில் இருக்கிறது. இதனால் நிறைந்தவராகி, நினைவின் அனுபவங்களால் மற்றவர்களுக்கு சேவை செய்யுங்கள். கிடைத்துள்ள பொக்கிஷங்களால், மகாதானியாகி தானம் செய்து கொண்டே இருங்கள். ஏனெனில், இவற்றை எவ்வளவு தானம் செய்கின்றீகளோ அவ்வளவு அதிகரிக்கும். மகாதானி ஆவதெனில் கொடுப்பது மட்டுமல்ல, மேலும் நிறைத்துக் கொள்வதாகும்.

சுலோகன்: ஜீவன்முக்தி நிலையின் கூடவே, தேகத்திலிருந்து விடுபட்டு விதேகி ஆவதே- முயற்சியின் கடைசி நிலையாகும்.

மாதேஷ்வரி அவர்களின் இனிய மகாவாக்கியம்

மறைமுகமான வேடதாரியான பரமாத்மாவிற்கு முன்னால் கன்னிப் பெண்கள், தாய்மார்களுடைய சந்நியாசம்

இப்பொழுது உலகாய மனிதர்களுக்கு இந்தக் கன்னிப் பெண்கள், தாய்மார்கள் ஏன் சந்நியாசம் செய்திருக்கின்றனர் என்ற சிந்தனை வரவேண்டும். இது ஒன்றும் ஹடயோகமோ, கர்ம சந்நியாசமோ கிடையாது. ஆனால், அவசியம் இது முற்றிலும் சகஜயோகம், இராஜயோகம், கர்மயோக சந்நியாசம் ஆகும். பரமாத்மா சுயம் அவரே வந்து உயிருடன் இருந்துகொண்டே தேகம் உட்பட தேகத்தின் அனைத்து கர்மேந்திரியங்களையும் மனதின் மூலம் சந்நியாசம் செய்விக் கின்றார் அதாவது 5 விகாரங்களை சம்பூரண சந்நியாசம் செய்வது அவசியம் ஆகும். பரமாத்மா வந்து தானம் கொடுங்கள், கிரஹணம் நீங்கிவிடும் என்று கூறுகின்றார். அரைக் கல்பமாக மாயையின் கிரஹணம் பிடித்துள்ளது. இதனால் ஆத்மா கறுப்பாக (பதீதம்) ஆகிவிட்டது. அதை மீண்டும் தூய்மை ஆக்க வேண்டும். பாருங்கள், தேவதைகளின் ஆத்மாக்கள் எவ்வளவு தூய்மை யாக மற்றும் வியப்பூட்டுபவர்களாக இருக்கின்றனர், எப்பொழுது ஆத்மா தூய்மையாக இருக்கின்றதோ, அப்பொழுது உடலும் கூட நோயற்றதாக, தூய்மையாகக் கிடைக்கிறது. எப்பொழுது முதலில் ஏதாவது பொருள் கிடைக்கிறதோ, அப்பொழுது இந்த சந்நியாசம் கூட செய்ய முடிகிறது. ஏழையின் குழந்தை செல்வந்தரிடம் தத்துக் குழந்தையாகப் போகிறது என்றால் அவசியம் எதையோ பார்த்துத் தான் தத்துக் குழந்தையாகப் போகிறது. ஆனால், செல்வந்த ருடைய குழந்தை ஏழையின் தத்துக் குழந்தையாகப் போக முடியாது. இங்கு இது ஒன்றும் அனாதை ஆஸ்ரமம் கிடையாது. இங்கேயோ, பெரிய பெரிய செல்வந்தர், உயர் குலத்தைச் சேர்ந்த தாய்மார்கள், கன்னிப் பெண்கள் உள்ளனர்,

இவர்கள் வீட்டிற்கு திரும்பி வந்து விட வேண்டும் என்று உலகத்தினர் இப்பொழுதும் விரும்புகின்றனர். ஆனால், இவர்கள் என்ன பிராப்தியாக அடைந்ததனால் அந்த மாயாவி செல்வம், பொருள் அதாவது அனைத்தையும் சந்நியாசம் செய்திருக்கின்றனர்? எனவே, அவசியம் அதன் மூலம் அவர்களுக்கு அதிகமான சுகம், சாந்தியின் பிராப்தி கிடைத்துள்ளது. ஆகையினாலேயே, அந்த செல்வம், பொருட்களை உதைத்துத் தள்ளி விட்டனர். எவ்வாறு இராஜா கோபிசந்த் மற்றும் மீரா இராணி பதவியை, அதாவது இராஜ்யத்தை சந்நியாசம் செய்தனர். இது ஈஸ்வரிய அதீந்திரிய அலௌகீக சுகம், அதற்கு முன்னால் அந்த உலகாயப் பொருட்கள் துச்சமானது ஆகும். மறு பிறவி எடுத்ததனால் நாம் ஜென்ம ஜென்மங் களுக்காக அமரபுரியின் இராஜ்யத்தைப் பிராப்தியாக அடைந்துகொண்டு இருக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகையினாலேயே, எதிர்காலத்தை உருவாக்குவதற்கான முயற்சி செய்து கொண்டு இருக்கின்றனர். பரமாத்மா வினுடையவர் ஆவது என்றால் அனைத்தையும் அவருக்கு அர்ப்பணம் செய்துவிடுவது என்பதாகும், பிறகு, அவர் அதற்குக் கைமாறாக அழிவற்ற பதவியைக் கொடுத்துவிடுகின்றார். எனவே, பரமாத்மா தான் இந்த சங்கமயுக சமயத்தில் வந்து இந்த மனோவிருப்பத்தைப் பூர்த்தி செய்கின்றார். ஏனெனில், வினாச ஜுவாலையில் உடல், மனம், செல்வம் உட்பட அனைத்தும் சாம்பல் ஆகிவிடும் என்று அறிந்திருக்கும்பொழுது, அதை ஏன் பரமாத்மாவின் காரியத்தில் வெற்றிகரமானதாக ஆக்கக் கூடாது? எப்பொழுது அனைத்தும் வினாசம் ஆகப்போகிறதோ, அப்பொழுது நாமும் பெற்றுக்கொண்டு என்ன செய்வது என்ற இந்த இரகசியத்தையும் இப்பொழுது புரிந்துகொள்ள வேண்டும். நாம் சந்நியாசி களைப் போன்று, மண்டலேஸ்வரர்களைப் போன்று ஒன்றும் மாளிகை கட்டி அமரப்போவதில்லை, ஆனால், ஈஸ்வரன் சேவையில் விதை விதைப்பதன் மூலம் அங்கு எதிர்காலத்தில் ஜென்ம ஜென்மங்களுக்கு இவருடையவராக ஆகிவிடுவோம், இது மறைமுகமான இரகசியம் ஆகும். பிரபுவோ வள்ளல் ஆவார், ஒன்று கொடுத்தால் நூறு பெறலாம். ஆனால், இந்த ஞானத்தில் முதலில் பொறுத்துக்கொள்ள வேண்டியதாக உள்ளது. எவ்வளவு பொறுத்துக்கொள்வீர்களோ, அவ்வளவு இறுதியில் பிரபாவம் வெளிப்படும். ஆகையினால், இப்பொழுதிலிருந்தே முயற்சி செய்யுங்கள். நல்லது.